உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 446/2021

பெயர் : மருத்துவர்.ஆனந்த்குமார்..,M.S(ortho) (அ.சா.7)
தகப்பனார் பெயர் :பழனிச்சாமி
கணவர் பெயர் :
வயது :40
கிராமம் :நாமக்கல்
வட்டம் :நாமக்கல்
தொழில் :நாமக்கல் மருத்துவகல்லூாரி எலும்புமுறிவு பிரிவு உதவி பேராசிரியர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

23.07.2025

முதல் விசாரணை:

நான் கடந்த 13.07.2017 அன்று நான் உதவி மருத்துவராக மேலூர் அரசு மருத்துவமனையில்அவசர சிகிச்சை பிரிவில் பணியாற்றி வந்தேன். அன்று இரவு சுமார் 8.45 மணியளவில் திரு.மலைச்சாமி வயது 53 என்பவர் வெட்டுக்காயத்துடன் அவசரசிகிச்சை பிரிவு, மேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தார்.அவரை நான் பரிசோதனை செய்துவிட்டு, உள்நோயாளியாக மருத்துவமனை எண்.1099367ல் அனுமதித்தேன். நான் தான் அவருக்கு விபத்து பதிவேடை பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு மலைச்சாமி அவர்களை பரிசோதனை செய்து நான் தான் பதிவு செய்தேன். மேற்படி ஆவணம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு பின்தலையில் 10 x 2 c.m அளவு எலும்பு தெரியும் வரை வெட்டுக்காயம் இருந்தது. மேலும் வலது மார்பில் 8 x 1x 1 c.m அளவில் வெட்டுக்காயம் இருந்தது. மேலும் வலது கையில் மணிக்கட்டிற்கு மேலே 7 x 2 செ.மீ எலும்பு ஆழம் வரை வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சையாக ரத்தம் வடிதலை நீக்குவதற்கு சுத்தம் செய்து தையல்போட்டுவிட்டு, மற்ற மருந்துகளும் கொடுக்கப்பட்டு, கை மற்றும் தலைக்காயத்தின் பாதிப்பு பற்றி மேல்சிகிச்சை அளிப்பதற்காக மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு பரிந்துரைத்தேன். மேற்படி அ.சா.ஆ.11 விபத்துபதிவேட்டின் பின்புறத்தில் காயச்சான்றிதழை நான் தான்

வழங்கினேன். மலைச்சாமிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று நான் காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளேன் மேற்படி காயச்சான்றிதழ் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கையில் ஏற்பட்ட 3வது காயத்தை சிகிச்சை அளித்த மதுரை அரசு ராசாசி மருத்துவமனை மருத்துவர் கொடுத்த கருத்துரையின் பேரில் MLC NO.27241 அடிப்படையில் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். நான் அவரை அனுமதிக்கும் போது, மலைச்சாமி தனக்கு தலைச்சுற்றல் இருப்பதாக தெரிவித்தார். மேலும் 5 தெரிந்த நபர்கள் தன்னை சந்தைபேட்டை அருகே தாக்கியதாக குறிப்பிட்டார். மேற்படி காயங்கள் கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எ.த.கு.வி :

மேற்படி காயங்களானது வாகனத்தில் வேகமாக சென்று விழுந்தாலும் ஏற்படக்கூடிய தன்மையுடையது என்றால் சரிதான். மலைச்சாமி மருத்துவமனையில் சேர்க்கப்படும் போது அவர் என்ன நிலையில் இருந்தார் என்றால் சுயநினைவுடன் தான் இருந்தார். தலைசுற்றல் இருந்தது.

அ.த.கு.வி : இல்லை

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.23 07:25:16 +0530

Assistant Sessions Judge

Melur